# நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

## 2017 ஏப்ரல் 01ஆம் திகதி தொடக்கம் 2017 ஜீன் 30ஆம் திகதி வரை

1. **மாகாணங்களுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான இணக்கப்பாட்டினை வழங்குதல்**
முதற் காலாண்டில் கிழக்கு மாகாணத்தினைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கான மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்கான இணக்கப்பாடானது கொள்கை ரீதியாக வழங்கப்பட்டது. கிழக்கு மாகாணத்திற்கான அபிவிருத்தித் திட்டமானது 28ஆம் திகதி மார்ச் 2017 அன்று பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அம் மாகாணத்தில் 7 ஆம் திகதி ஏப்ரல் 2017 இல் கலந்துரையாடப்பட்டு அது சம்மந்தமான அமுல்படுத்தல்களுக்கு கொள்கை ரீதியான இணக்கப்பாடு வழங்கப்பட்டது.




2. **மாகாணங்களிடமிருந்து 2018 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத் தேவைகளை பெற்றுக்கொள்ளல்**
நிதி ஆணைக்குழுவானது அனைத்து மாகாணங்களிடமிருந்தும் 2018 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத் தேவைகளை பெற்றுக்கொண்டது. மேலும் சப்பரகமுவ, ஊவா, வடமேல், மத்திய, தெற்கு மற்றும் வட மாகாணங்களிடமிருந்து மூலதன தேவைகள் குறிப்பிட்ட காலாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டது.மாகாணத்தேவைகள் பற்றிய மீளாய்வு கூட்டங்கள் சம்மந்தப்பட்ட மாகாண அதிகாரிகளினது பங்களிப்புடன் மூன்றாம் காலாண்டில் நடாத்த திட்டமிடப்பட்டது.

3. **தேசிய திட்டமிடல் திணைக்களத்தினது (NPD) ஒத்துழைப்புடன் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்கான வழிகாட்டல் தயாரித்தல்**
தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் ஒரு ஒருங்கிணைந்த திட்டமிடல் நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதனை நோக்கமாக கொண்டு ஒவ்வொரு துறைக்கும் உப துறைக்கும் உரிய திட்டமிடல் படிவங்களின் வரைபு மற்றும் கருத்துத்தாள் தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல்

திணைக்களத்தினது மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. மேலும் இது ஏனைய தொடர்புடைய நிறுவனங்களினது ஒத்துழைப்புடன் விருத்தி செய்யப்படும்

4. **நிதி ஆணைக்குழுவினது ஆண்டறிக்கை / வருடாந்த அறிக்கை – 2016**

நிதி ஆணைக்குழுவினது ஆண்டறிக்கை 2016 இனை மும் மொழிகளிலம் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்க முன்னா் ஜனாதிபதி செயலகத்திற்கு சமா்ப்பிக்கப்படல் வேண்டும். ஆங்கில மொழிபெயா்ப்பின் பிரதியானது முடிவடைந்துள்ள நிலையில் தமிழாக்கமும் சிங்கள மொழிபெயா்ப்பும் நடைபெற்ற வண்ணம் இருந்தது.

5. **மாகாண கணக்காய்வு அறிக்கை தயாரிப்பு**

கணக்காய்வாளா் நாயகத்தின் திணைக்களத்தினால் மத்திய, தென் மற்றும் சபரகமுவ மாகாணங்களுக்கான கணக்காய்வு அறிக்கைகள் கிரமமாக ஆய்வுசெய்யப்பட்டு அது சம்மந்தமாக கணக்காய்வாளா் நாயகம் பிரதம செயலாளா் மற்றும் ஆளுனா் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

6. **நிதி ஆணைக்குழுவினது புதிய அலுவலக கட்டட நிர்மாணம்**

நிதி ஆணைக்குழுவுக்கான புதிய கட்டட வேலைகள் முன்னேற்றகரமாக உள்ளது. திட்ட ஆலோசனைக் குழு (கட்டட நிர்மாணம் மொறட்டுவ பல்கலைக்கழகம்) வேலைப்பகுதி மற்றும் ஒப்பந்தகாரரதும் பங்களிப்புடனும் நிதி ஆணைக்குழுவில் முன்று கூட்டங்கள் இடம் பெற்றது. அனுமதிக்கப்பட்ட ரூபா 300 மில்லியனில் 30ஆம் திகதி ஜீன் வரையான செலவு ரூபா 88 மில்லியன். நிகழ்ச்சி திட்டமானது 60 நாட்கள் பின் நோக்கிய நிலையில் உள்ளது.

7. **நிதி ஆணைக்குழுவினது தரவுத்தளம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை**

நிதி ஆணைக்குழுவினது பிரத்தியேக பயன்பாட்டிற்காக உள்ளக முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வது தொடா்பாக ஆசியா பவுண்டேசன் (TAF) நிறுவனத்துடன் தொடா்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கமைய பல்வேறு கூட்டங்கள் திட்ட மேலாண்மை கண்காணிப்புப் பிரிவு (DPMM) மற்றும் தகவல் தொடா்பாடல் தொழில் நுட்ப முகவா் நிலையத்துடன்(ICTA) நடாத்தப்பட்டது. இதன்விளைவாக திட்ட மேலாண்மை கண்காணிப்புப் பிரிவானது தற்போதுள்ள முகாமைத்துவ தகவல் முறைமையை(MIS) அபிவிருத்தி செய்யவும் நிதி ஆணைக்குழு மற்றும் மாகாணங்களுக்குத்தேவையான முகாமைத்துவ தகவல் முறைமையை பூா்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8. **நிதி ஆணைக்குழுவினது சட்ட வரைபு**

நிதி ஆணைக்குழுவினது சட்ட வரைபு உருவாக்கப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கு சமா்ப்பிக்கப்பட்டது ஜனாதிபதியின் செயலகம் சட்ட வரைபு பற்றிய சில அவதானிப்புகளை அனுப்பியுள்ளது. நிதி ஆணைக்குழுவானது அவதானிப்பக்கள் சம்மந்தமாக ஜனாதிபதி செயலக சட்ட பிரிவினருடன் கலந்துரையாட நேரத்தை கேட்டுக்கொண்டது.

9. **33 ஆவது முதலமைச்சா்களின் மகாநாடு**

33 ஆவது முதலமைச்சா்களின் மகாநாடானது மேதகு ஜனாதிபதியின் ஆதரவுடன் 6ஆம் திகதி மே மாதம் 2017 இல் சின்னமல் லொட்ச் ஹபரண இல் நடைபெற்றது. நிதி ஆணைக்குழுவின் தலைவா் மற்றும் செயலாளா் இதில் பங்கு பற்றினா்.

இம்மாநாட்டின் முக்கிய நோக்கமானது மாகாணசபை பிரதிநிதிகள் தமது பிரதேச பிரச்சினைகளை கலந்துரையாடவும் அதற்கான பரிந்துரைகளை வழங்கவும் வாய்ப்பளிப்பதாகும்.

**10. அதிகாரிகளின் திறன் மேம்படுத்தல்**

**பயிற்சி**

கரீபியன் மற்றும் தென் பசுபிக் நாடுகளின் பொது நிதி முகாமைத்துவம், பெல்ட் மற்றும் வீதி நாடுகளின் மக்களின் வாழ்வாதார முக்கியத்தும் சம்மந்தமான குறுகியகால (2-3 வார) பயிற்சியில் நிதி ஆணைக்குழுவின் நான்கு அதிகாரிகள் பங்கு பற்றினார்களா. இது சீனாவில் நடைபெற்றது.

- திரு.நிஷந்த சுஜீவ, உதவி பணிப்பாளர்
- திருமதி.எராந்தி குணசேகர, உதவி பணிப்பாளர்
- திரு.சரத் சந்திர குமார, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
- திருமதி.தினுஷி ஹேரத் , நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்

**விருந்தினர் விரிவுரைகள்**

ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன நிறுவனத்தின் ஆலோசகரான திரு.ஹொண்டா ஜப்பானிய உள்ளூராட்சி முறைகள் உள்ளூராட்சி முறையில் நிதியிடல் சம்மந்தமான ஒரு கண்ணோட்டம் என்ற தொனிப்பொருளில் விரிவுரை வழங்கினார்.



**11. நிதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு**

திரு.எம்.எல்.ஏ.சந்திரதாச அவர்கள் நிதி ஆணைக்குழுவின் திணைக்கள உத்தியோகத்தராவார் இவர் 27 ஆம் திகதி டிசம்பர் 2016 ஆம் ஆண்டு முதல் பொது சேவை ஆணைக்குழுவினரால் (PSC) தரம் 1 இற்கு உயர்த்தப்பட்டுள்ளார். அதன்படி அவர் நிறுவனத்தின் திணைக்களப் பணிப்பாளராக அனுமதிக்கப்பட்ட ஆளணியில் உள்ளடங்குவார்.

**12. நிதி ஆணைக்குழுவினது செயலாற்றுகை அறிக்கை**

2017 ஆம் ஆண்டின் முதற்காலாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது

**13. தரம் 1 கணக்காளர் பதவிக்கு உள்ளீர்ப்பு செய்தல்**

நிதி ஆணைக்குழுவானது 2016 இல் பொருத்தமான தரம் 1 உத்தியோகத்தரை நியமிக்க முடிவு செய்தது. பல முயற்சிகளுக்குப் பின்னர் பொருத்தமான ஒருவர் அடையாளங் காணப்பட்டார். பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சானது அவரை நிதி ஆணைக்குழுவிற்கு மாற்றலாகும்படி கேட்டுக்கொண்டது.

**14. ஆராய்ச்சிப் பிரிவு**

ஆராய்ச்சிப் பிரிவு நிறுவப்பட்டது இதன் நடவடிக்கைகளுக்காக மனிதவளம் மேம்படுத்தப்பட வேண்டும்

**15. கணக்காய்வு முகாமைத்துவக்குழுவினை நியமித்தல் மற்றும் செயற்படுத்தல்**

கணக்காய்வு முகாமைத்துவக்குழு நியமிக்கப்பட்டது இதன் முதற் கூட்டமானதுகணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத் தலைவர், கணக்காய்வு மேற்பார்வையாளர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. இக் கூட்டத்தின் தீர்மானங்கள் அனைத்து நிதி ஆணைக்குழுவினது அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

**16. தேசிய மற்றும் மாகாண மட்டங்களுக்கு இடையில் உகந்த ஒருங்கிணைப்பு மூலம் அபிவிருத்திச் செயன்முறையை மேம்படுத்தல் பற்றிய பட்டறை பின்தொடர்**

ஜீன் 15, 2015 அன்று நடைபெற்ற பட்டறைகளில் தீர்மானம் செய்யப்பபட்ட முடிவுகள் பரிந்துரைகளுக்கு அமைவாக நிதி ஆணைக்குழுவினால் அடையாளங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு பட்டியலைத் தயார் செய்து செயற்பாட்டுத்திட்டத்துடன் சரிபார்க்கும் பட்டியலும் ஜனாதிபதியின் செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது இதன் விளைவாக ஜனாதிபதியின் செயலாளர் பட்டறைகளில் செய்யப்பபட்ட தீர்மானப் பரிந்துரைகளின் முன்னேற்றத்தினைப் பற்றிக் கலந்துரையாட 22 ஆம் திகதி பெப்ரவரி 2017 கூட்டத்தினைக் கூட்டினார். சம்மந்தப்பட்ட அமைச்சுக்களின் மூத்த அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இதன் முன்னேற்றத்தினை நிதி ஆணைக்குழு மீளாய்வு செய்துள்ளது.

**17. விசேட கற்கைகள்**

பல சிறப்பு ஆய்வுகள் நிதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்டன அவை பின்வருமாறு

- மாகாணங்களின் ஆளணி மற்றும் தனிநபர் ஊதியங்கள் மீதான செலவீனம்
- 2016-2017 ஆண்டுகளுக்கிடையில் மாகாண அபிவிருத்தியின் நிதியிடல் இடைவெளி
- சுகாதாரத் துறையின் மீதான செலவினம்

**18. ஆணைக்குழுவின் கூட்டங்கள்**

பின்வரும் ஆணைக்குழுவின் கூட்டங்கள் இடம்பெற்றன
4ஆம் திகதி ஏப்ரல் 2017

17ஆம் திகதி மே 2017 (சிறப்புக்கூட்டம்)

20ஆம் திகதி மே 2017

03ஆம் திகதி ஜீன் 2017